

சிறப்பாக செயலாற்றிவரும் சிறந்த வார்டு உறுப்பினர் மக்கள் சேவைக்கு சேவை ரத்னா விருது பெற்ற 3வது வார்டு மாமன்ற உறுப்பினர், நகரமைப்பு குழுத்தலைவர் லோகநாயகி கருப்புசாமி திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், வடக்கு மாவட்டச் செயலாளர் – மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றனர். உடன் 2ம் மண்டலத்தலைவர் ஆர்.கோவிந்தராஜ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்புசாமி ஆகியோர் உள்ளனர்.

## தேசிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் நிதி விடுவிக்கப்படும் என்பதா?

# தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய ரூ.2,158 கோடியை உடனடியாக ஒதுக்க வேண்டும்!

## கல்வியில் அரசியல் செய்யாதீர் – ஒன்றிய கல்வித்துறை அமைச்சருக்கு, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கடும் கண்டனம்!

திருச்சி, பிப். 17- கல்வியில் அரசியல் செய்யாதீர்கள் என ஒன்றிய அமைச்சருக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தேசிய கல்விக்கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டால்தான் நிதி விடுவிக்கப்படும். ஏற்காத பட்சத்தில் 2 ஆயிரம் கோடி ரூபாயை விடுவிக்க சட்டத்தில் இடமில்லை. அரசியல் காரணங்களுக்காகவே தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு எதிர்க்கிறது என மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேட்டி அளித்திருந்த நிலையில், திருச்சி விமான நிலையத்தில் தமிழ்நாடு பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி அளித்த பேட்டி வருமாறு:-

ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது. 2158 கோடி ரூபாயை ஒன்றிய அரசு உடனடியாக ஒதுக்க வேண்டும். ரூ.19 கோடி செலவில் அனைத்து அரசு பள்ளி மாணவிகளுக்கு தற்காப்பு குறித்து பயிற்றுவிக்கிறோம்.

ஆனால் தற்போது SSA நிதி நிறுத்தப்பட்டுள்ளதால் அதனை தொடர இயல வில்லை.

ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்துகிறது. இந்த இருமொழிக் கொள்கையால் தமிழ்நாட்டில் என்ன தீங்கு ஏற்பட்டுள்ளது. இஸ்ரோவில் பணிபுரியும் நாராயணன் உள்ளிட்ட பலரும் தமிழ்நாடு அரசு பள்ளியில் பயின்றவர்கள் தான்.

இந்தியா மட்டுமின்றி உலகின் பல்வேறு பகுதிகளில் தமிழ் வழி பயின்ற மாணவர்கள் தங்கள் திறமையை நிரூபித்து வருகிறார்கள்.சம்பந்தமே இல்லாமல் மும்மொழிக் கொள்கையை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்துவது ஏன்? என்று கேள்வி எழுப்பினர்.

### தமிழ் வழியின் முக்கியத்துவம்!

கேவி எனப்படும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அதேசமயம் சி.பி.எஸ்.சி./ மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் கட்டாயம் என சட்டம் இயற்றியுள்ளோம். கடந்தாண்டு தமிழ் வழியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் புத்துணர்வு முகாம் நடத்தி உள்ளோம்.

இதுபோன்று தமிழ் சார்ந்த நல்ல பல திட்டங்களை கொண்டு வந்துள்ளோம்.

### மாணவர்களுக்கு தரமான கல்வி!

பள்ளி மாணவ - மாணவியர்களின் நலன் கருதி மத்திய அரசு நிதி வழங்காவிட்டாலும் தொடர்ந்து நமது கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் தமிழ்நாடு அரசு சொந்த நிதியில் மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கி வருகிறது,

தமிழ்நாடு முதல்வரின் செல்வாக்கு நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது.

மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தாமல் எப்படி அவரது செல்வாக்கு உயர்ந்திருக்கும்? என கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசிடமிருந்து கல்விக்கான நிதியை பெறுவதற்கு தமிழ்நாடு முதல்வருடன் கலந்து பேசி நீதிமன்றத்தை அணுகுவதா ? இல்லையா? என முடிவெடுப்போம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டியளித்தார்.

தலைமை: தொண்டாமுத்தூர் அ.ரவி, வரவேற்புரை: ஆர்.பரமேஸ்வரன், ஒருங்கிணைப்பாளர்: விக்கி (எ) பா.விக்னேஷ்குமார்!

# கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் உதயநிதி அகாடமி திறப்பு விழா!

ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் வி.செந்தில் பாலாஜி - கே.இ.பிரகாஷ் எம்.பி. - மேயர் ந.தினேஷ்குமார்- டாக்டர். கோகுல் கிருபா சங்கர் பங்கேற்பு!'

கோவை, பிப்.17 - கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் உதயநிதி அகாடமி திறப்பு விழா நாளை (17.02. 2025 திங்கட்கிழமை) அன்னூர் அம்மணி அருணா காம்ப்ளக்ஸ் வளாகத்தில் பகல் 12.00 மணியளவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விக்கி (எ) பா.விக்னேஷ்குமார் ஒருங்கிணைப்பில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ. ரவி தலைமையில் அன்னூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.பரமேஸ்வரன் வரவேற்புரையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம், அன்னூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் நா.பழனிச்சாமி, அன்னூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் மு.தனபாலன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் க.நாகராஜ், பி.கே.அருணாச்சலம், வே.சூரியன்தம்பி, உதயநிதி பாபு, எம்.மனோஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

கழக துணை பொதுச் செயலாளர், ஆ.இராசா எம்.பி. அகாடமியை திறந்து வைத்து சிறப்புரையாற்று கிறார்.

இந்நிகழ்ச்சியில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், அவினாசி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் கோகுல் கிருபா சங்கர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதில் மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் சி.ஆர். இராமச்சந்திரன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பா.அருண் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முக சுந்தரம், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஏ.நந்தகுமார், மாவட்ட அவைத்தலைவர் நாபுருசோத்தமன்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.சண்முகசுந்தரம், டி.பி. சுப்பிரமணியன், அ.அசரப் அலி, சோமு (எ) த.சந்தோஷ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.பி. நாகராஜ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வி.சி.ஆறுக்குட்டி, கோவை மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மாவட்ட துணைச்செ யலாளர்கள் ஆ.அசோக், பி.செந்தில், எஸ்.ஜெயந்தி, பொருளாளர் எஸ்.அப்துல் ரஹ்மான், மாவட்ட கவுன்சிலர் இ.ஆனந்தன், தலைமை செயற்குழு முன்னாள் உறுப்பினர் அன்னூர் ஆர்.நடராஜன், சென்னை பழனிச்சாமி, பேராசிரியர் தீர்த்தகிரி,

பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.முருகானந்தன், கே.ஜி.குருபிரசாத், ஆர்.எஸ். நவீன், வெ.குருபுத்திரன், ஆர்.கதிர்வேல்சாமி, எஸ்.பழனிச்சாமி, வி.பி.செல்வராஜ், ஆர்.தேவராஜ், க. வீரபத்திரன், பிரஸ் கே.சிவக்குமார், விஜயகுமார், எஸ். பூர்ணிமா, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.சுரேந்திரன், எம். எம்.டி.கல்யாணசுந்தரம், எஸ்.கார்த்திக், எஸ்.பி.சுரேஷ் குமார், சி.எம்.கே.குமார், என்.ஏ.சாமிபையன், பகுதி கழகச் செய்லாளர்கள் எஸ். பொன்னுசாமி, சிவா (எ) பழனிச்சாமி, கே.அருள்குமார், ஜெ.எஸ்.சரத் விக்னேஷ், சி. லோகநாதன், கார்த்திக் கே. செல்வராஜ், மு.ராஜேந்திரன், எஸ்.ஜெய்லாப்தீன், கேபிள் மணி, நகர கழகச் செயலாளர்கள் அ.அறிவரசு, ப.முனுசாமி, மு.முகமது யூனுஸ், ஆர்.வெங்கடேஷ், பேரூர் கழகச் செயலாளர்கள் வெ. விஷ்வபிரகாஷ், வே.சுரேஷ், எஸ்.ஸ்ரீதரன், எம்.ஆர்.உதய குமார், என்.ஜெனார்த்தனன், ப.சுரேந்திரன், ராமசந்திரன், சின்ராஜ், எ.கே.ரங்கசாமி, டி.வி.குமார், தண்டபாணி, அண்ணாதுரை, தண்டபாணி உள்பட கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

இறுதியில் அன்னூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர் பிரசாந்த் நன்றியுரையாற்றுகிறார்.



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன், க. மறைமலை,மாவட்டக்கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்.மணிவண்ணன்,பொருளாளர் மு.லோகநாதன் மற்றும் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகராட்சி மூர்த்தி கலையரங்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள். விவசாய சங்க பிரதிநிதிகளுடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை யில் 2025–2026 ஆம் ஆண்டிற்கான தனி நிதி நிலை அறிக்கை தொடர்பாக மண்டல அளவிலான கருத்துக்கேட்புக் கூட்டம் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் 14.02.2025 அன்று நடைபெற்றது. வேளாண்மை உழவர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் வேளாண் உற்பத்தி ஆணையர் தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை ஆணையர் டி ஆபிரகாம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமரவேல் பாண்டியன், சர்க்கரைத்துறை இயக்குனர் .த.அன்பழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாநிலங்களவை உறுப்பினர் க.கல்யாணசுந்தரம், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வே.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், க.அன்பழகன், கே.பூண்டி கலைவாணன், டி.கே.ஜி. நீலமேகம், கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், நிவேதா மு.முருகன், ம.பிரபாகரன், எம்.பன்னீர்செல்வம், எஸ்.ராஜ்குமார், கும்பகோணம் மாநகராட்சி மேயர் க.சரவணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், துணை மேயர் சு.ப.தமிழழகன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

## மாவட்ட கழக செயலாளர் என் கௌதமன் பங்கேற்பு!

# நாகை நகராட்சியில் ரூ1.90 கோடி மதிப்பில் 10 கட்டிடங்கள்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

நாகை. பிப்.17 - நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் மற்றும் நாகபட்டினம் நகராட்சி பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ளரூ ரூ. 1.90 கோடி மதிப்பில் 10 கட்டிடங்க கட்டடங்களை நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர்அன்பில் மகேஷ் பொய்யா மொழி திறந்து வைத்தார்.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் மற்றும் நாகபட்டினம் நகராட்சி பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களை திறப்பு விழா நடைபெற்றது. திறப்பு விழாகளுக்கு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகாஷ் தலைமை தாங்கினார். நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் நாகை சட்டமன்ற உறுப்பினர் முகம்மது ஷா நவாஸ் ஆகியோர் முன்னிலை வைத்தார்.

நிகழ்ச்சிகளில் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் வாழ்குடி ஊராட்சி தண்ணீர்பந்தல் கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழலக கட்டடத்தினையும், கோட்டூர் ஊராட்சி சடகோபன்மூலை கிராமத்தில் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டடத்தினையும், திருப்புகலூர் ஊராட்சி வவ்வாலடி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ; ரூ.32.80 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடத்தினையும், அகரகொந்தகை ஊராட்சி வாழ்மங்கலம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.46.40 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடத்தினையும், உத்தமசோழபுரம் ஊராட்சி பூதங்குடி கிராமத்தில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழலக கட்டடத்தினை நாகூரில் ரூ.10.86 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழலக கட்டடம் மற்றும் பீரோடும் தெருவில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்காடி கட்டடத்தினையும், நாகை நம்பியார் நகரில் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டடத்தினையும், நாகை தியாகராஜபுரம் மற்றும் கீரக்கொல்லைத்தெரு பகுதியில் தலா ரூ.21.00 இலட்சம் வீதம் ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கூடம் உள்ளிட்ட கட்டடங்களையும் மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தாட்கோ தலைவர் உமதிவாணன், மாவட்ட கழக அவைத் தலைவர் ப.செல்வம், பொருளாளர் மு.லோகநாதன், துணை செயலாளர் ஆரூர்.மணி வண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், க.மறைமலை, நாகை நகர கழக செயலாளர், நகரமன்ற தலைவர் இரா.மாரிமுத்து, ஒன்றிய கழக செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன் ஆர்.டி.எஸ்.சரவணன், நாகூர் நகர கழக செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் எல்.எஸ்.ஈ.பழனியப்பன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆர். இளஞ்செழியன், மாவட்ட சார் பணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, எஸ். பால்ராஜ், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, இளம் சுந்தர், குலோத்துங்கன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஜெபகர் சாதிக், கார்த்திகேசன்,சேகர் ஜெயலட்சுமி, செந்தில்நாதன், அமீர் ஜெகபர், பிரதீப், ஆர்.ஆர். பாரி, தமிழ்செல்வன், கலைச்செல்வி, திருமருகல் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் ஜெயக்குமார், குமரவேல், ஜெயபால், செந்தில் குமார், சுமதி, திருமருகல் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் துரையரசன், ஜெகபர்அலி, சோமு, நாகை நகர கழக நிர்வாகிகள் வெற்றிலை கடை சிவா, பி. திலகர், ஆர்.ரமணி, அபுபக்கர், சித்ரா குலோத்துங்கன், த இளைஞர் அணி அமைப்பாளர் ஏ எஸ் அருண், நாகை நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர். எஸ். சத்யன், மற்றும் அரசு அலுவலர்கள்; கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாராபுரம் ஒன்றியம், பொன்னாபுரம் ஊராட்சியில் பொன்னாபுரம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டும் பணி மற்றும் பொன்னாபுரத்தில் ரூ.35.00 இலட்சம் மதிப்பில் நிலவருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டிடம் கட்டும் பணியினை மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை கா.ரா. சுப்பையன்

### பிப்ரவரி 17 (2019)



தனது கல்லூரி காலங்களிலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கோவை மாவட்டக் கழகச் செயலாளராகவும் – கழக தீர்மானக்குழுச் செயலாளராகவும், உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கோவை நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பிகே. ராஜகோபால்

### பிப்ரவரி 17 (2002)



திருவள்ளூர் மாவட்டம், போரூர் நகரச் செயலாளராக தொடர்ந்து முப்பது வருடங்களாக பணியாற்றியவர்.

சைதாப்பேட்டை கூட்டுறவு நிலவள வங்கியின் இயக்குனராகவும் பணியாற்றியவர்.

மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சிறையில் இருந்துள்ளார்.

மேலும், கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**